கேஸ் சிலிண்டர்

5 மாநில சட்டசபைத் தேர்தலுக்காக விலை குறைப்பு!

தினத்தந்தி நாளேடு தலையங்கம்!

சென்னை,செப்.1

ரக்சா பந்தனை முன்னிட்டு கேஸ் சிலிண்டர் விலை குறைப்பு, 5 மாநில சட்டசபைத் தேர்தலை மனதில் நினைத்து குறைக்கப்பட்ட விலையாகும் என தினத்தந்தி நாளேடு 31.8.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

ஒவ்வொரு மாதமும், ஏன் ஒவ்வொரு நாளும் விலைவாசியை அடிப்படையாக வைத்தே இல்லத்தரசிகள் பட்ஜெட் போட்டு செலவழிப்பதை வழக்கமாக கொண்டிருக்கின்றனர். இதில் சில பொருட்கள் விலை உயர்ந்தாலும் அதை தவிர்க்கவும் முடியாது, பயன்பாட்டை குறைக்கவும் முடியாது. அப்படிப்பட்ட பொருட்களின் வரிசையில் முன்னணியில் இருப்பது, சமையல் கியாஸ் சிலிண்டர்தான். விலை உயர்ந்தால், அய்யோ! இப்படி விலை உயர்ந்துவிட்டதே! எங்களால் சமாளிக்க முடியாதே! என்று குறைபட்டுக்கொள்வார்களே தவிர, சமையல் கியாஸ் சிலிண்டர் வாங்காமல் இருப்பதில்லை, இருக்கவும் முடியாது.

தற்போது சமையல் கியாஸ் சிலிண்டர் உள்பட அனைத்து பொருட்களின் விலைவாசியும் உயர்ந்திருக்கிறது. அதிலும் உணவுப் பொருட்கள் விலை உயர்வால், நுகர்வோர் விலைவாசி குறியீட்டு எண் 7.4 சதவீதமாக இருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது, பெரும்பாலான குடும்பங்களில் குறிப்பாக ஏழைஎளிய, நடுத்தர குடும்பங்களில் வலியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 15 ந்தேதி சுதந்திரத்தினத்தன்று டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து பிரதமர் நரேந்திர மோடி பேசும்போது, 'விலைவாசி உயர்வினால் என் நாட்டு மக்கள் மீது விழுந்துள்ள சுமையை குறைக்க நான் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து அந்த நடவடிக்கையை எடுப்போம். என் முயற்சிகள் தொடரும்' என்றார்.

தான் சொன்னதை செய்யும் விதமாக விலைவாசியை குறைக்க சமையல் கியாஸ் சிலிண்டர் விலையை சிலிண்டருக்கு ரூ.200 குறைத்துள்ளார். நேற்று முன்தினம் ஓணம் பண்டிகை கேரள மக்களால் கொண்டாடப்பட்டது. நேற்று சகோதர பாசத்தை வெளிக்காட்டும் வகையில், சகோதரிகள் தங்கள் சகோதரர்களுக்கும், சகோதரர்களாக நினைப்பவர்களுக்கும் கைகளில் ராக்கி கயிறு கட்டும் 'ரக்ஷா பந்தன்' பண்டிகை கொண்டாடப்பட்டது. இந்த நல்ல நாளில் தங்கள் சகோதரிகளுக்கு, சகோதரர்களும் பரிசுகள் வழங்குவார்கள். அந்தவகையில் இல்லத்தரசிகளுக்கு ஒரு சகோதரன் பரிசளிப்பதுபோல, பிரதமர் மோடி நாட்டில் உள்ள 33 கோடி சமையல் கியாஸ் சிலிண்டர் இணைப்புகளுக்கும், சிலிண்டருக்கு ரூ.200 குறைத்துள்ளார்.

இந்த 33 கோடியில் 9.60 கோடி பேர் பிரதமரின் 'உஜ்வாலா யோஜனா' இணைப்பு பெற்றவர்கள். வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும் ஏழை பெண்களுக்கு இலவச சமையல் கியாஸ் இணைப்புகள் வழங்கும் திட்டம்தான் உஜ்வாலா யோஜனா திட்டம். இவர்களுக்கு ஏற்கனவே சிலிண்டருக்கு ரூ.200 மானியம் வழங்கப்படுகிறது. இப்போது இந்த ரூ.200ஐ சேர்த்தால் அவர்களுக்கு ரூ.400 மானியமாக கிடைக்கும். இதுமட்டுமல்லாமல், கூடுதலாக 75 லட்சம் ஏழை பெண்களுக்கு உஜ்வாலா இணைப்புகள் வழங்கவும் அரசு முடிவெடுத்துள்ளது, ஏழை பெண்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

ரக்ஷா பந்தன் பண்டிகையை முன்னிட்டு நாட்டின் கோடிக்கணக்கான சகோதரிகளுக்கு இது ஒரு பரிசு என்று பிரதமர் மகிழ்ச்சி பொங்க கூறியுள்ளார்.

ஆனால் எதிர்க்கட்சியினர் இது வரப்போகும் 5 மாநிலங்களின் சட்டசபை தேர்தலை மனதில் நினைத்து குறைக்கப்பட்ட விலையாகும் என்றும், நாடாளுமன்ற தேர்தல் முன்கூட்டியே வரப்போகிறது, அதற்காகத்தான் இந்த விலை குறைப்பு என்றும் கூறுகிறார்கள்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தலையங்கம்

தினத்தந்தி

31.8.2023 (வியாழக்கிழமை)

தேர்தல் பரிசா? ரக்ஷா பந்தன் பரிசா?

ஒவ்வொரு மாதமும், ஏன் ஒவ்வொரு நாளும் விலைவாசியை அடிப்படையாக வைத்தே இல்லத்தரசிகள் பட்ஜெட் போட்டு செலவழிப்பதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். இதில் சில பொருட்கள் விலை உயர்ந்தாலும் அதை தவிர்க்கவும் முடியாது. பயன்பாட்டை குறைக்கவும் முடியாது. அப்படிப்பட்ட பொருட்களின் வரிசையில் முன்னணியில் இருப்பது, சமையல் கியாஸ் சிலிண்டர்தான். விலை உயர்ந்தால், அய்யோ! இப்படி விலை உயர்ந்துவிட்டதே! எங்களால் சமாளிக்க முடியாதே! என்று குறைபட்டுக்கொள்வார்களே தவிர, சமையல் கியாஸ் சிலிண்டர் வாங்காமல் இருப்பதில்லை, இருக்கவும் முடியாது.

தற்போது சமையல் கியாஸ் சிலிண்டர் உள்பட அனைத்து பொருட்களின் விலைவாசியும் உயர்ந்திருக்கிறது. அதிலும் உணவுப்பொருட்கள் விலை

தென்காசி ஒருங்கிணைந்த மாவட்டம் கழகம் சார்பில் நடைபெற உள்ள பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பிக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு தென்காசி இசக்கி மகால் அருகில் வருகிற 5 ம் தேதி இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ள இடத்தை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பார்வையிட்டார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன்,வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. மண்டல இளைஞர் அணி துணைச் செயலாளர் ராஜா, யு.எஸ்.டி. சீனிவாசன், சாதிர், ஆறுமுகச்சாமி, கிருஷ்ணராஜா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில்

ரூ.34.80 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆய்வு செய்து வழங்கினார்!

திண்டுக்கல், செப்.1-

திண்டுக்கல் மாவட்டத்தில் பாராளுமன்ற நிலைக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டு, ரூ.34.80 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 2 நாட்கள் ஆய்வுப் பயணம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற நிலைக்குழு (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை) தலைவர் கனிமொழிஅவர்கள் தலைமையிலான குழுவினர் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, முன்னிலையில் திண்டுக்கல் பகுதியில் பல்வேறு இடங்களில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர்ப.வேலுச்சாமி, பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.பி சின்ராஜ், ராஜ்வீர் டீலர், நரேந்திர குமார், டாக்டர் தலாரி ரங்கய்யா, ஷியாம் சிங் யாதவ், எம்.அப்துல்லாசிர் ஆகியோர் உடனிருந்தனர்.

நாடாளுமன்ற நிலைக்குழுவினர், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், எத்திலோடு ஊராட்சியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, அங்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்தை பார்வையிட்டனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுயஉதவிக்குழுவினர் உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரங்கை பார்வையிட்டனர். மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு அளிக்கப்படும் தொழிற்பயிற்சிகள், தொழில் தொடங்கிட வழங்கப்படும் வங்கி கடனுதவிகள், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், அதன்மூலம் கிடைக்கும் வருமானம், மகளிரின் பொருளாதார மேம்பாடு ஆகியவை குறித்து மகளிர் சுயஉதவிக்குழுவினரிடம் கேட்டறிந்தனர். தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் கிராம பஞ்சாயத்து சேவை மையத்தின் செயல்பாடுகளை கேட்டறிந்தனர். பின்னர் அங்குள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சென்று, குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கற்றல் முறை, வழங்கப்படும் உணவுகள், சமையலறை, குடிநீர் வசதி, சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர், இ.கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இன்றைய குழந்தைகள்தான் நாளைய எதிர்கால சமுதாயம் என்பதை அறிந்து, அவர்களுக்கு கல்வி அளிக்கவும், பசியின்றி கல்வி கற்கவும் அரசு தொடக்கப்பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின்படி வாரந்தோறும் வழங்க வேண்டிய உணவு வகைகள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், சமையலறை, பாத்திரங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம்(PMAYG) மூலம் இலவச வீடுகள் கட்டி பயனடைந்த பயனாளிகளுடன் பாராளுமன்ற நிலைக்குழுவினர் கலந்துரையாடினர். பயனாளிகளை தேர்வு செய்யும் முறை, இத்திட்டத்தின் பயன்கள் குறித்து கேட்டறிந்தனர்.

பின்னர் சிலுக்குவார்பட்டியில் நியாயவிலைக் கடையைப் பார்வையிட்டு, அங்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும், அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்களின் தரம் குறித்தும், பொருட்கள் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். தொடர்ந்து சிலுக்குவார்பட்டியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் செல்வராஜ் தோட்டத்தில் இருந்து பாலு தோட்டம் வரை அமைக்கப்பட்ட நீர் உறிஞ்சும் அகழிகளை பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின்போது, நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், 20 நபர்களுக்கு ரூ.27.50 இலட்சம் மதிப்பிலான வங்கி கடனுதவிகள், 23 நபர்கள் தங்கள் விளைநிலங்களில் பலன் தரும் மரக்கன்றுகள் நடவு செய்வதற்காக ரூ.7.3 இலட்சம் மதிப்பிலான ஆணைகள் என மொத்தம் ரூ.34.80 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் நா.சரவணன், உதவித் திட்ட அலுவலர் திருமதி சங்கமித்ரா உட்பட பலர் உடனிருந்தனர்.

கிராம ஊராட்சிகளில் கழகக் கொடியேற்றும்போது

கட்சித் தொண்டர்களின் ஒற்றுமை மகிழ்ச்சி அளிக்கிறது!

ரெட்டியார் சத்திரம் ஒன்றிய கிராம ஊராட்சிகளில் - அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

ஆத்தூர், செப். 1-

கிராம ஊராட்சிகளில் தி.மு.க. கொடிகளை ஏற்றும் போது கட்சித் தொண்டர்களின் ஒற்றுமை மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று நீலமலைக்கோட்டை மற்றும் புதுச்சத்திரம் அண்ணாநகர் காலனியில தி.மு.க. கொடிக்கம்பத்தில் கொடியேற்றிப் பேசுகையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி குறிப்பிட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் நீலமலைக்கோட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட அண்ணாநகர் பகுதியில் நலத்திட்ட உதவிகளை துவக்கி வைக்க வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அப்பகுதியில் உள்ள கழகக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றினார்.

நீலமலைக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற கொடியேற்று விழாவிற்கு ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி முன்னிலை வகித்தார். இதுபோல புதுச்சத்திரம் ஊராட்சி அண்ணாநகர் அருந்ததியர் காலனியில் கொடியேற்றிவிட்டு கழகத் தொண்டர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி,

"கிராமங்களுக்குச் செல்லும் போது அங்குள்ள கொடிக்கம்பத்தில் திமுக கொடியேற்றும் போது கருத்து வேறுபாடுகளை மறந்த திமுக தொண்டர்கள், நிர்வாகிகள் ஒற்றுமையுடன் கொடியேற்றும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. காரணம் அண்ணாவில் தொடங்கி தமிழினத்தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் பாதுகாக்கப்பட்டு இன்று திராவிடமாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இந்தியாவில் பெருமைமிகு இயக்கமாக உருவெடுத்துள்ள திமுக என்ற மாபெரும் இயக்கத்தின் கொடியை ஒவ்வொரு முறை ஏற்றும் போது எங்களை பெருமை அடையச் செய்கிறது" என்றார்.

நிகழ்ச்சியில் தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ்பெருமாள், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ் வரி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சுப்புலெட்சுமி, புதுச்சத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் லெட்சுமி, துணைத்தலைவர் கிருஷ்ணவேனி காளியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ரெங்கசாமி, மாணவரணி அமைப்பாளர் செல்வம், மாவட்ட பிரதிநிதி இளங்கோவன், வார்டு உறுப்பினர் சண்முகதாய், அண்ணா நகர் கிளைச்செயலாளர்கள் ஆறுமுகம், பெருமாள், முன்னாள் தி.மு.க. ஊராட்சி செயலாளர் மூர்த்தி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வேலூரில் அ.தி.மு.க. ஆட்சியில் பெயர் நீக்கப்பட்டது:

மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர்!

தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்க அரசாணை!

வேலூர், செப்.1-

வேலூர் மாவட்ட அறிவியல் மையத்திற்கு மீண்டும் கலைஞர் பெயர் இணைத்து தமிழ்நாடு அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது.

வேலூரில் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம் என்ற பெயரில் - இயல் அறிவியல், கண்டுபிடிப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சார் உள்ளிட்ட வைகளின் காட்சிக்கூடம் கொண்ட அறிவியல் மையம் 2011 ஜனவரி 25 முதல் செயல்பட்டு வருகிறது. அப்போதைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இந்த அறிவியல் மையம் திறந்து வைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு சூட்டப்பட்ட 'டாக்டர் கலைஞர் கருணாநிதி' என்ற பெயரை நீக்கிவிட்டது. கடந்த 10 ஆண்டுகளாக பெயர் இல்லாமல் மாவட்ட அறிவியல் மையம் என்றே இருந்து வந்தது.

இதற்கிடையே வேலூர் தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன், மீண்டும் அந்த மாவட்ட அறிவியல் மையத்துக்கு டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று முன் இருந்ததுபோல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் எழுதியும் நேரில் வற்புறுத்தியும் இருந்தார்.

இதையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றார். தமிழ்நாடு அரசு இதை ஆய்வு செய்து, இனி வேலூரில் உள்ள மாவட்ட அறிவியல் மையத்திற்கு, 'டாக்டர் கலைஞர் கருணாநிதி' என்று பெயரை மீண்டும் சேர்த்து தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மீண்டும் கலைஞர் பெயர் அந்த மாவட்ட அறிவியல் மையத்திற்கு அதிகாரப்பூர்வமாக சூட்டப்பட்டதால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (31.08.2023) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார் , கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், செப். 1-

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (2.9.2023 சனிக்கிழமை) மாலை 04.00 மணிக்கு நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு குறித்து.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நாமக்கல் வருகை குறித்து.

தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து.

04.09.2023 அன்று நகர்ப்புற மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களால் அடிக்கல் நாட்டப்பட உள்ள இராசிபுரம் கூட்டு குடிநீர்; திட்டம் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார், எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

செப்.18ந்தேதி விநாயகர் சதுர்த்தி விடுமுறை!

அரசாணை வெளியீடு!

சென்னை,செப்.1-

விநாயகர் சதுர்த்தி இந்த ஆண்டு செப்டம்பர் 18ந் தேதி கொண்டாடப்படுகிறது.

செப்.17ந்தேதி அறிவிக்கப்பட்ட விடுமுறை ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தி செப்டம்பர் 18ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. ஆனால் அதற்கு ஒருநாளுக்கு முன்பாக அரசு விடுமுறை அறிவித்துள்ளது.

விநாயகர் சதுர்த்தி இந்த ஆண்டு செப்டம்பர் 18ந் தேதி தான் கொண்டாடப்படுகிறது. பொதுவாக அமாவாசையில் இருந்து நான்காவது நாளே சதுர்த்தி வரும். அதன் அடிப்படையில் ஆவணி மாத அமாவாசையில் இருந்து 4ம் நாளான செப்டம்பர் 18ந் தேதியே விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படும். இந்த விஷயத்தில் குழப்பம் தேவையில்லை என்று ஆற்காடு கா.வெ.சீத்தாராமைய்யர் சுத்த வாக்கிய சர்வமுகூர்த்த பஞ்சாங்க கணிதர் சுந்தர ராஜன் அய்யர் கூறி இருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் விநாயகர் சதுர்த்தி அரசு விடுமுறை செப்.18ந்தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை மயான பூமியில் கட்டுமானப் பணி!

சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,செப்.1-

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு139, சைதாப்பேட்டை மயான பூமியின் எரிவாயு தகன மேடை இடிக்கப்பட்டு புதிய கட்டுமானப் பணிகள் நடைபெற உள்ளதால், 01.09.2023 முதல் 31.07.2024 வரை 10 மாதங்களுக்கு மேற்கண்ட மயான பூமி இயங்காது.

எனவே, கட்டுமானப் பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள கண்ணம்மாபேட்டை அல்லது நெசப்பாக்கம் மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்

மின்னல் கந்தப்பன் இல்ல திருமண வரவேற்பு!

அமைச்சர்கள் – கழகத்தினர் வாழ்த்துகின்றனர்

சென்னை, செப். 1 -

சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் புதல்வர் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

தி.மு.கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது நல்வாழ்த்துக்களுடன் சென்னை தெற்கு மாவட்டக் கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பனின் புதல்வர் கே.ஹேமகுமார் என்ப வருக்கும், (USA) கொலரடோ மாநிலம், டெண்வர் நகரில் வசிக்கும் மைக்கேல்அனெட் ஆகியோரின் புதல்வி குமாரத்தி லாரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (01-09-2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை 600 004, கிருஷ்ணா ஹால் IV, 2வது தளத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினரகள் - சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.